*Volume No: 1* *Issue 1* *September 2016*

*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal of literary Explorations*
*ISSN:* 2456 - 4613
*IMIRJ, 1(1), 2016 [1-7]*



# குறுந்தொகையில் உழவு மேலாண்மை

**பா.அருள்ஜோதி**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**

**வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.**

**E-mail: paruljothipappuraj@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

பாரதநாடு பழம்பெரும் நாடு. நீர் வளமும், நிலவளமும் நிறைந்த நாடு. இந்நாட்டில் பெரும்பாலான மக்கள் உழவுத்தொழிலையே நம்பி வாழ்கின்றனர். அதனால் தான் உழவுத் தொழிலை நம்நாட்டின் முதுகெலும்பாகக் கருதுகிறோம். உழவுத்தொழிலே உயிர்த்தொழில். உயர்தொழில் என்று பழந்தமிழ் மக்கள் இதன் சிறப்பினை உணர்ந்து போற்றியுள்ளனர். உலகத்தைச் சுற்றிப் பல்லாயிரக்கணக்கில் தொழில்கள் நடந்தாலும் உழவுத்தொழிலான விவசாயத்திற்குப் பின்பு தான் உலகம் இயங்க முடியும் எனலாம்.

**"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை." (குறள் -1031)**

என்று வள்ளுவரும் தமது குறளில் இதனையே சுட்டுகிறார். உழவுத்தொழிலின் நுட்பங்கள் பெருக்கி, நீர் வளம் கொண்டு, நிலவளத்தால் பயிர் வளமும் உயிர் வளமும் பெருக்கினர் பழந்தமிழ் மக்கள். குறுந்தொகையில் காணலாகும் உழவர் பெருமக்கள் தமது தொழிலைத் திட்டமிட்டு மேலாண்மை படுத்தியமையைக் காண்போம்.

**குறிப்புச் சொற்கள்:** மேலாண்மை – நிர்வகித்தல், உயர்மட்ட நிர்வாகம் செய்தல்,

பஞ்சகாவியம் - பசுவிலிருந்துக் கிடைக்கக் கூடிய பால், தயிர், நெய், கோசலம், கோமியம் அனைத்தும் கலந்தது.

மேழி – கலப்பை

**மேலாண்மை விளக்கம்**

மேலாண்மை எனும் சொல்லிற்கு “நிர்வகித்தல், அடக்கியாளுதல்” என்ற பொருள் தருகிறது லிப்கோ அகராதி. மேலாண்மை என்பதற்கு, “உயர் மட்ட நிர்வாகம் செய்தல்” என்று தமிழ் ஆங்கில அகராதி சுட்டியுள்ளது. தமிழ் விக்கிபீடியாவானது,“மேலாண்மை என்பது ஊழியர்களைக் கொண்டு அமைப்பொன்றினது சகல வளங்களையும் பயனுறுதி மிக்க வண்ணம் முறைப்படுத்தி வழி நடத்திச் செல்ல எடுக்கப்படும் நடவடிக்கைகளை விவரிக்கும் இயலாகும்” என்று விவரிக்கின்றது.

அகராதிகளின் கருத்துக்கள் அடிப்படையில் மேலாண்மை என்பது எந்தவொரு தொழிலையும் திட்டமிட்டு நிர்வாகம் செய்தல் என்பதைக் குறிப்பிடுகின்றது.

**வள்ளுவர் கூறும் மேலாண்மை**

வள்ளுவர் ‘தெரிந்து வினையாடல்’ என்ற அதிகாரத்தில் மேலாண்மை பற்றிக் குறிப்பிடுகிறார்.

> **“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
> **அதனை அவன்கண் விடல்” (குறள் - 517)**

எனும் குறளில் எந்தவொரு செயலையும் இக்கருவியால் இன்னவன் செய்து முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகே அத்தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இக்குறளின் பொருளாக மு.வ. குறிப்பிடுகிறார். அந்த வகையில் உழவுத்தொழிலை உழவனால் தான் திறம்பட செய்து முடிக்க இயலும் என்பதை உணர முடிகின்றது.

**குறுந்தொகையில் உழவு மேலாண்மை**

சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலோடு தொழிலும் ஒன்றியுள்ளதை அறிய முடிகின்றது. குறுந்தொகையில் காணலாகும் மக்கள் தன் வாழ்வோடு இணைந்த உழவுத்தொழிலைத் திட்டமிட்டுச் செயல்படுத்தியுள்ளனர் எனலாம்.

- நிலத்தை உழுதல்
- எரு இடுதல்
- விதை விதைத்தல்
- களை பறித்தல்
- பயிரைப் பாதுகாத்தல்

எனும் முறையான திட்டமிடுதலினை உழவுத்தொழிலில் பயன்படுத்தியுள்ளமை புலனாகின்றது.

**நிலத்தை உழுதல்**

விவசாயத்திற்கு ஆதாரமாக விளங்குவது மண்வளம், நம்நாட்டில் செம்மண், கரிசல் மண், வண்டல் மண் என்று பலவிதமான மண்வகைகள் உண்டு. இந்த மண்வளத்தைச் சரியான முறையில் பக்குவப்படுத்தினாலே போதும் உரமின்றி பயிர்கள் செழித்து வளரும். அதனால் தான் உழவன் பயிர் செய்வதற்கு முன்பு விளைநிலங்களைப் பலமுறை உழுகின்றான்.

**“தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்து எருவும்**
**வேண்டாது சாலப் படும்.” (குறள் -1037)**

உழுகின்ற பூமியின் மண்ணை ஒரு பங்கு கால் பங்காகக் காயவைத்துப் பயிர் செய்தால் உரம் போடாமலே பயிர் செழித்து வளரும் என்பதை வள்ளுவர் மேற்கண்ட குறளில் சுட்டியுள்ளார். ஔவையாரும் தமது ஆத்திச்சூடியில் “பூமி திருத்தி உண்” (ஆ.சூ. 81) என்று உழவின் மகத்துவத்தை எடுத்துரைக்கிறார்.

குறுந்தொகையில் உழவன் மழை பெய்த ஈரம் காய்வதற்கு முன் உழுதாக வேண்டும் என்று விரைந்து உழுவதாகச் சுட்டப்பட்டுள்ளது. இங்கு உழவர்கள் பாதி ஈரத்தில் உழும்பொழுது உழவானது சுலபமாகும் எனும் தொழில் நுணுக்கத்தை அறிய முடிகின்றது.

**“..................................நெஞ்சே**
**ஈரம்பட்ட செவ்விப் பைம் புனத்து**
**ஓர்ஏர் உழவன் போல**
**பெருவிதுப்பு உற்றன்றால், நோகோ யானே” (குறுந். 131)**

உழவன் உழுவதற்குத் தக்க பருவம் போகும் முன் விரைந்து உழுது விட நினைக்கின்றது போல, தலைவனின் நெஞ்சமானது தலைவியைக் காண விரைகின்றது என்கிறது குறுந்தொகை.

இவ்வாறாக, உழவர்கள் உழவுத்தொழிலின் நுணுக்கங்களை அறிந்தவராய், பருவ நிலைகளைப் புரிந்து கொண்டு உழுவதிலும் வேகத்துடன் செயல்பட்டுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. இதனால் தான் புலவர்கள் மேழிச் செல்லம் கோழை படாது என்றும், ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமில்லை என்றும் உழவுத் தொழிலின் சிறப்பினைப் புகழ்கின்றனர்.

**எரு இடுதல்**

பயிர்களுக்குத் தேவையான சத்துப் பொருட்கள் உழவன் இடக்கூடிய எருவிலிருந்து தான் கிடைக்கின்றன. நம் முன்னோர்கள் வீட்டில் வளர்க்கக் கூடிய ஆடு, மாடுகளின் கழிவுகளைக் குப்பைகளில் போட்டு, அவை மக்கியவுடன் எருவாகப் பயன்படுத்தியுள்ளனர். காடுகளில் ஆடுகளைக் கிடை அமர்த்துதல், மண்புழுஉரம் போடுதல் பயிர் வளர்ச்சிக்கு பஞ்சகாவியம் தெளித்தல் ஆகிய இயற்கையான முறையில் இயற்கை உரங்களைப்

பயன்படுத்தியுள்ளனர்.இன்றைக்கு நாம் விதைப்பது தொடங்கி அறுவடை வரையிலும் இரசாயனத்தையே உபயோகப் படுத்துகின்றோம். வள்ளுவர் தமது குறளில்,

**“ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றுஅதன் காப்பு” (குறள் - 1038)**

என்று, உழவன் உழுவதோடு மட்டுமின்றிப் பயிருக்கு உரமிடுவது, களை எடுப்பது, நீர் பாய்ச்சுவது, பயிரைப் பாதுகாப்பது நல்லது என விளக்குகிறார்.

குறுந்தொகை மக்கள் இயற்கையாகக் கிடைக்கக் கூடிய இயற்கை உரங்களையே எருவாகப் பயன் படுத்தியுள்ளனர். உழவன் மரத்திலிருந்து உதிரக்கூடிய மகரந்தத் துகளை வயல்களுக்கு எருவாக இடுகிறான் என்பதை,

**“பயறு போல் இணர பைந்தாது படீஇயர்**
**உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்**
**காஞ்சி ஊரன் கொடுமை” (குறுந். 10)**

எனும் பாடலால் காண முடிகின்றது. இங்கு உழவன் நிலத்திற்கு உரமிட்டதால், அவனது உடலில் காஞ்சிப் பூவின் மகரந்தத் துகளானது படிந்திருப்பது போல, தலைவன் பரத்தையிடம் சென்று வந்த குறிப்பைத் தலைவி அவனது உடலில் காண்கிறாள் என்பது புலனாகிறது.

உழவன் நிலத்தின் தேவையை அறிந்து உரமிடுவது போன்று, தலைவியோ தலைவனின் தேவையை உணாந்து செயல்படுவது நன்மை பயக்கும் என்பதை அறிய முடிகின்றது.

**விதை விதைத்தல்**

‘மண்ணிலே வித்தெடுத்து பலா் வாழ வாழும் குணமுடையோர் விவசாயி’ என்று ஒரு கவிஞன் பாடியுள்ளதைப் போன்று உழவா்கள் பொதுநலத்தோடு வாழ்பவா்கள் எனலாம். ஔவையார் கூறுவது போன்று பருவத்தே பயிர் செய்தல் உழவனுக்கு நன்மையை உண்டாக்கும். குறுந்தொகையில் உழவா்கள் தக்க பருவத்தே தரிசு நிலங்களை உழுது கூடைகளில் வைத்திருந்த விதைகளை விதைத்து விட்டு மாலையில் வீடு திரும்புகின்றனர் என்பதை,

**“முதைப் புனம் கொன்ற ஆர்கலி உழவர்**
**விதைக்குறு வட்டி போதொரு பொதுளப்**
**பொழுதோ தான் வந்தன்றே”**
**……………………………………**
**மாலை நுனிவிருந்து அயர்மார்**
**தோ் வரும் என்னும் உரை வாராதே” (குறுந். 155)**

எனும் பாடல் விளக்குகின்றது. இங்கே மாலை வந்து விட்டது. உழவர்கள் எல்லோரும் கூடையில் வைத்திருந்த விதைகளை விதைத்து விட்டு வீடு திரும்புகின்றனர். ஆனால் மாலை வந்து விடுவேன் என்று சொல்லிச் சென்ற தலைவனின் தேரானது இன்னும் வரவில்லையே எனத் தலைவி ஏங்குவதாய் இப்பாடல் அமைந்துள்ளது.

உழவர்கள் முறையாகக் காலத்தைக் கடைப்பிடிப்பவர்கள் என்பதைக் குறுந்தொகையால் அறிய முடிகின்றது. உழவன் அரும்பாடுபட்டு உழைத்ததினால் அதிக விளைச்சலை அடைகிறான். ஓராண்டு காத்திருந்து பெற்ற மகசூலில் சிறந்ததை அடுத்த ஆண்டிற்குரிய விதை நெல்லாகப் பயன்படுத்தியுள்ளனர் அன்றைய கால மக்கள். ஆனால் இன்றைய காலச்சூழலில் விதை நெல்லையும் காசு கொடுத்தே வாங்க வேண்டியுள்ளது. 4கிலோ மக்காச் சோள பாக்கெட் ஒன்று ரூ950, பருத்தி விதை 1கிலோ ரூ150 என்று விதைகளுமே காசு கொடுத்துத் தான் வாங்கப்படுகின்றன. பழைய விதைகளைப் பயன்படுத்தினால் விளைச்சலைக் காண முடியாத சூழலுக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளச் சூழலைக் காண முடிகின்றது. விதைகள் காலச் சூழலுக்கேற்ப மாறினாலும் விவசாயிகளின் உழைப்பில் எவ்வித மாற்றமும் இல்லை என ஒரு கவிஞன் பாடுகிறான்.

**‘களை எடுக்கணும் வெத வெதக்கணும்**
**நாற்று நடணும் கதிர் அறுக்கணும்**
**கால நேரம் தவறிடாமா**
**நாலா வேலையும் நானே பார்க்கணும்’**

என்று எல்லா வேலைகளையும் உழவனே பார்க்கின்ற தன்மையை இப்பாடல் சுட்டியுள்ளது.

**களை பறித்தல்**

மழை பெய்தவுடன் தேவையற்ற பயிர்களின் வரவு பெருகி விடும். இதிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கக் களைச் செடிகளைப் பறித்து எறிகின்றனர் விவசாயிகள். இன்றைக்குக் களை எடுப்பதற்கு ஒரு நபர் ஒன்றிற்குக் கூலியாக ரூ200 ஆகி விடுகின்றது.

குறுந்தொகையில் உழவர்கள் மலை நெல்லை விதையாக விதைத்து விட்டு, அதில் தேவையின்றி வளர்ந்துள்ள காட்டு மல்லிகையையும், கற்றாழையையும் பறித்து எறிந்து விடுவர் என்று களை எடுத்தல் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது.

**“அருவிப்பரப்பின் ஐவனம் வித்திப்**
**பருஇலைக் குளவியொடு பசுமரல்கட்கும்**
**காந்தள் அம் சிலம்பில் சிறுகுடி பசித்தென” (குறுந். 100)**

இங்கு உழவன் பயிர்கள் வளர்வதிலிருந்து செடிகள் பெரிதாகும் வரையிலும் களைகள் வளரவிடாமல் பாதுகாத்தலை விளக்கியுள்ளது.

**“நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்**
**புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல் உலகில்**

**நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு**
**எல்லோர்க்கும் பெய்யும் மழை" (மூதுரை – 10)**

என்று மூதுரை கூறுவது போன்று, நெல் பயிருக்கு இறைத்த தண்ணீரானது கால்வாய் வழியாகச் சென்று புல்லுக்கும் பயன்படுகிறது. அது போல உழவனுக்கு நன்மையை அழிப்பது நெற்பயிராகும். ஆனால் புல்லோ களையாக வளர்ந்து தீமையைச் செய்கின்றது எனலாம்.

**பயிரைப் பாதுகாத்தல்**

உழவன் பயிர்களை வளர்ப்பதோடு நின்று விடாமல் பாதுகாப்பதும் அவசியம். பயிர்கள் விளைந்தவுடன் பறவைகளாலும், விலங்குகளாலும் விளைச்சலுக்கு அழிவு நேரலாம். அதனால் தான் சங்ககால மக்கள் தினைப்புனம் காவல் காத்துள்ளனர்.

**"மரம் கொல் கானவன் புனம் துளர்ந்து வித்திய**
**பிறங்கு குரல் இறடி காக்கும், புறம் தாழ்**
**அம்சில் ஓதி, அசை இயல், கொடிச்சி**
**திருந்து இழை அல்குற்குப் பெருந்தழை உதவிச்**
**செயலை முழுமுதல் ஒழிய, அல்லது**
**அரலை மாலை சூட்டி,**
**ஏமுற்றன்று - இவ் அழுங்கல் ஊரே" (குறுந். 214)**

இப்பாடலானது மரம் வெட்டி, நிலம் திருத்தி, விதை விதைத்து, கதிர்களைப் பாதுகாப்பது முதலாக அனைத்தையும் பருவமறிந்து செய்யக் கூடிய உழவன், தன்னுடைய மகளுக்கு மணம் முடிக்கும் தக்கப் பருவம் வந்தும் அறியாமல் இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

இங்கு, ஒரு உழவனுக்கு குடும்பம், உறவினர்களை விடத் தமது தொழிலில் கவனம் இருப்பதைக் காணமுடிகின்றது.

வள்ளுவரும் தமது குறளில், நிலத்துக்குச் சொந்தக்காரன் விளைச்சலை அடிக்கடி சென்று பார்க்க வேண்டும். அவ்வாறு பார்க்காவிட்டால் கவனிக்கப் படாத மனைவி வெறுப்பது போல் நிலமும் விளைச்சலில் தயக்கம் காட்டி விடும் என்கிறார்.

**"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லாளின் ஊடி விடும்" (குறள் - 1039)**

என்ற குறளானது நிலத்தின் பாதுகாப்பு குறித்து உழவனுக்கு எடுத்துரைக்கின்றது.

## முடிவுரை

- ❖ மேலாண்மை என்பது எந்தவொரு தொழிலையும் திட்டமிட்டு நிர்வாகம் செய்தல் என்பதைக் குறிப்பிடுகின்றது.
- ❖ உழவன் நிலத்தை உழுதல், எரு இடுதல், விதை விதைத்தல், களை பறித்தல், பயிரைப் பாதுகாத்தல் என்ற நிலையில் விவசாயத்தில் திட்டமிட்டு மேலாண்மை புரிதலை அறிய முடிகின்றது.
- ❖ உழவர்கள் உழவுத்தொழிலின் நுணுக்கங்களை அறிந்து பருவ நிலைகளுக்கேற்ப உழுதால் தான் விளைச்சல் சிறப்பாகும் என்பதை அறிய முடிகின்றது.
- ❖ உழவன் நிலத்தின் தேவையை அறிந்து உரமிடுதல் நன்று. மண்ணின் வளத்தை மேம்படுத்த இயற்கை உரமே சிறந்ததாகும் என்பதை உணர முடிகின்றது.
- ❖ உழவுத் தொழிலின் காலமானது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் காண முடிகின்றது.
- ❖ உழவுத் தொழிலுக்குத் தீங்கு செய்வனவற்றை அகற்றி, பயிர்களைக் கண்காணித்தல் சிறப்பைத் தரும் என்பதை அறிய முடிகின்றது.
- ❖ உழவனுக்குக் குடும்பம், உறவுகளை விடத் தமது தொழிலில் கவனம் இருப்பதனை உணர முடிகின்றது.

## சான்றாதார நூல்கள்


1. குறுந்தொகை: வி.நாகராஜ் (உ.ஆ.) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

2. திருக்குறள்: பரிமேழலகர் உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.